சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

**அசல் வழக்கு எண்.199/2015**

C/w

அசல் வழக்கு எண்.400/2015

**PW1 சக்தி கண்ணன்** **04.11.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>

தாவா சொத்தில் மேல்புறம் தென்வடல் இட்டேரி உள்ளது என்று சொன்னால் சரியல்ல, பஞ்சாயத்து ரோடு உள்ளது. தாவா சொத்திற்கு வடபுறத்தில் உள்ள பாகத்தில் வடகிழக்கு மூலையில கிணறு உள்ளது என்றால் சரிதான். அது பொது கிணறு அந்த கிணற்றிலிருந்து தான் எனது தோட்டத்திற்கு பாசனம் செய்யப்படுகிறது என்றால் சரிதான். வாதிகளாககிய நான், எனது சகோதரி, எனது தாயார் ஆகியோர் 19.06.2013 தேதியில் பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். பாகம் செய்து கொண்ட சொத்தை பொறுத்து 24.06.2014 தேதியில் ஒரு ஆக்ஸிஸ் வங்கியில் அடமான பத்திரம் கொடுத்து கடன் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 04.11.2020 தேதியில் ஆக்ஸிஸ் வங்கியில் பணத்தை கொடுத்து அந்த கடனை முடித்து கொண்டோம் என்றால் சரிதான். எனது தாயார் ஸ்ரீராம் பைனான்ஸ் கடன் பத்திரம் எழுதி கொடுத்து 24.01.2023 தேதியில் கடன் பெற்றிருந்தார் என்றால் சரிதான். அந்த கடன் தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 19.06.2013 தேதியிட்ட வாதிகளாகிய எங்களுக்குள் செய்து கொண்ட பாகசாசனம் என்றால் சரிதான். அந்த பாக ஆவணத்தில் எனக்கு சி செட்யூல் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார், எனது பெரிய தகப்பனர், எனது

தாத்தா ஆகியோர் செய்து கொண்ட மேற்குறிப்பிட்ட பாக சாசனத்தில் 1988 ஆம் ஆண்டில் 1366 எண்ணாக பதிவு செய்யப்பட்ட எனது தகப்பனார், எனது பெரிய தகப்பனர், எனது தாத்தா செய்து கொண்ட பாக சாசனத்தை குறிப்பிட்டு தான் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரிதான். சி செட்யூலாக ஒதுக்கப்பட்டுள்ள சொத்தில் வடபுற எல்லையாக நாச்சிமுத்து கவுண்டர், சீரங்கம்மாள் பூமி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணமானது **பிவாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.06.2014 தேதியியில் ஆக்ஸிஸ் வங்கிக்கு எழுதிக்கொடுத்த அடமான பத்திரத்தில் 3 அயிட்டமாக தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் **பிவாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் வங்கியில் செலுத்தப்பட்ட இரசீது என்றால் சரிதான், அந்த ஆவணம் **பிவாசாஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் ஸ்ரீராம் பைனான்ஸ்க்கு எழுதி கொடுத்த அடமான பத்திரம் என்றால் சரிதான், அது **பிவாசாஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1988 ல் செய்து கொண்ட பாக பத்திரத்தை குறிப்பிட்டு எங்கள் குடும்பத்திற்குள் நாங்கள் பாகம் செய்து கொண்ட காரணத்தினால் நான் தாவாவில் பாகப்பிரிவினை பரிகாரம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது அப்பாவிற்கு வரவேண்டிய சொத்தை கேட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 2 அடமானங்களை செய்து கொண்டும், 1 இரசீது எழுதி கொடுத்தது பின்னிட்டும் நான் தற்போது பாகம் கோர இயலாது என்றால் சரியல்ல. எனது அப்பாவின் சொத்திற்கு தான் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 1988 பாகப் பிரிவினையில் 3, 4 இலக்கமிட்டவர்கள் திருமணம் ஆகி தனித்தனியாக போய்விட்ட காரணத்தினாலும், குடும்பத்தில் தகராறு ஏற்பட்ட காரணத்தினாலும் பொது குடும்ப நம்மையை உத்தேசித்து சில பஞ்சாயத்தார்களை வைத்து பஞ்சாயத்தார்கள் செய்து பைசல் படிக்கு நாம் அனைவரும்

ஒப்புக் கொண்டு என கண்டு 1988 பாகப்பிரிவினை பத்திரத்தில் வருகிறது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் நாச்சிமுத்து கவுண்டர் காலமானதற்கு பின்னிட்டு அவரது மனைவி சீரங்கம்மாள், பாலசுப்பிரமணியம், சிவசாமி ஆகியோர் வழக்கு சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல, நான் வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் சிவசாமி காலமானதற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான நானும், இதர வாதிகளும் 1ம் பிரதிவாதியுடன் வழக்கு சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் என்றால் சரியல்ல. எனக்கு அனைத்து விவரங்களும் நன்கு தெரிந்த பின்பும் பிரதிவாதிகளை அலைக்களிக்க இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2014 ல் வங்கியில் கடன் பெறும் போது நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களையும், வில்லங்க சான்றையும் சேர்த்து வங்கியில் சரிபார்க்கப்பட்டு கடன் வழங்கப்பட்டது என்றால் சரிதான், ஆனால் எங்களுக்குள் 2013 ம் வருடம் பாக பிரிவினை ஆகி பின்னிட்டு பாத்தியப்பட்ட சொத்தை வைத்து தான் கடன் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். நான் பொய்யாக தாக்கல் செய்துள்ள பாக பிரிவினை வழக்கு செல்லத்தக்கதல்ல தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் வழக்கில் கோரியுள்ள விவரங்கள் எனக்கு கிடைக்கத்தக்தல்ல என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி